**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.96** **நாள் : 18.07.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் மருத்துவ சேவைகள் துறையின் சார்பில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு பொதுமக்களிடையே குடும்பநல நிரந்தர மற்றும் தற்காலிக கருத்தடை முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடமாடும் வாகனங்களை ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

= = = =

பெருகிவரும் மக்கள் தொகையினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஜுலை திங்கள் 11 ஆம் நாள் உலக மக்கள் தொகை தினமாக ஐக்கிய நாடுகள் சபையினால் தெரிவிக்கப்பட்டு ஆண்டு தோறும் அனுசரிக்கப்படுகிறது.

அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மருத்துவ சேவைகள் துறையின் சார்பில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு பொதுமக்களிடையே குடும்பநல நிரந்தர மற்றும் தற்காலிக கருத்தடை முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் 7 நடமாடும் மருத்துவ வாகனங்களை ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.07.2019) ரிப்பன் மாளிகை வளாகத்தில் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறை சார்பாக அம்மா மாளிகை கலையரங்கில், பெருகிவரும் மக்கள் தொகையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த **“தாய்சேய் நலத்தின் பாதுகாப்பு திட்டமிட்ட குடும்பத்தின் பொறுப்பு”** என்ற கருதரங்கம் நடைபெற்றது. பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி. மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மேல்நிலை பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களிடையே நடைபெற்ற பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளையும், பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார். முன்னதாக துணை ஆணையாளர் (சுகாதாரம்) அவர்களின் தலைமையில் உலக மக்கள் தொகை தின உறுதி மொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து பெருகிவரும் மக்கள் தொகையினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த மாணவ, மாணவியர்களின் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாநகர நல அலுவலர் டாக்டர். திரு.என்.ஏ. செந்தில்நாதன், பெருநகர மருத்துவ அலுவலர் டாக்டர் எம்.எஸ். ஹேமலதா, குடும்ப நலத்துறை இணை இயக்குநர் டாக்டர் இந்துமதி, மாநகராட்சி உதவி நல அலுவலர்கள், செவிலியர்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**